மார்ச்
2020

விண்மீன் .காம்

நான்காவது வார நடப்பு நிகழ்வுகள்

23 மார்ச் – 31 மார்ச்

நடப்பு நிகழ்வுகள்

1. 'COVID-19 அவசரகால நிதியத்துக்கு' $1 மில்லியன் டாலர் நிதியளிப்பதாக உறுதியளித்துள்ள SAARC உறுப்பு நாடு எது?

அ. ஆப்கானிஸ்தான் ☑

ஆ. வங்கதேசம்

இ. இலங்கை

ஈ. பாகிஸ்தான்

❖ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்ட, 'SAARC கொரோனா அவசரகால நிதியத்துக்கு' ஆப்கானிஸ்தான் $1 மில்லியன் டாலர் பங்களிப்பு செய்வதாக உறுதியளித்தது. கொடிய கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை கையாளுவதற்காக, இந்தியா, $10 மில்லியன் டாலர் பங்களிப்பு செய்வதாக முன்மொழிந்தது. இந்த அறிவிப்புக்குப்பிறகு, நேபாளமும் பூட்டானும் முறையே கிட்டத்தட்ட $1 மில்லியன் டாலர் மற்றும் $100,000 டாலர்களை, 'SAARC கொரோனா அவசரகால நிதியத்துக்கு' வழங்கின. மாலத்தீவு சார்பில் $0.2 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2.எந்த சமூக ஊடக வலைதளத்தில், COVID-19 வைரஸ் பற்றிய போலியான தகவல்கள் பரப்பப்படுவதை தடுப்பதற்காக, இந்திய அரசு, 'MyGov கொரோனா உதவி எண்'ணை அறிமுகப்படுத்தியுள்ளது?

அ. ஃபேஸ்புக்

ஆ. வாட்ஸ்அப் ☑

இ. டுவிட்டர்

ஈ. இன்ஸ்டாகிராம்

❖ COVID-19 பற்றிய தவறான தகவலைப் பரப்புவதைத் தடுக்கும் ஒரு முயற்சியாக, வாட்ஸ்அப், இந்திய அரசின் அதிகாரப்பூர்வ அரட்டை இயலியை (chatbot) அறிமுகம் செய்துள்ளது. COVID-19 தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் நோக்கத்தின்கீழ் இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வாட்ஸ்அப் அரட்டை இயலியானது, "MyGov Corona Helpdesk" என அழைக்கப்படுகிறது, மேலும் இது, அனைத்து வாட்ஸ்அப் பயனர்களுக்கும் அணுக கிடைக்கிறது. '9013151515' என்ற எண்ணை திறன்பேசியில் சேமிப்பதன் மூலம் வாட்ஸ்அப் பயனர்கள் இந்த அரட்டை இயலியை அணுகவியலும்.

3.புதுப்பிக்கப்பட்ட DPP-2020 கையேட்டை மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் வெளியிட்டார். 'DPP' என்பது எதைக் குறிக்கிறது?

அ. Direct Procurement Procedure

ஆ. Direct Promotion Proposal



இ. Defence Procurement Procedure ☑

ஈ. Defence Promotion Proposal

❖ புதுப்பிக்கப்பட்ட DPP–2020 கையேட்டை (பாதுகாப்பு கொள்முதல் நடைமுறைவு வரைவு – 2020) மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் வெளியிட்டார்.

❖ இந்த DPP கையேடு என்பது கடந்த 18 ஆண்டுகளாக, பாதுகாப்பு மூலதன வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை வாங்குவதை நிர்வகிக்கப் பயன்படும் கொள்முதல் கையேடு ஆகும். இந்தியாவில் தயாரிக்கப்படும் பாதுகாப்பு உபகரணங்களை அதிகளவில் கொள்முதல் செய்வதை இந்த 2020 வரைவு பதிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

4.உலக மகிழ்ச்சி அறிக்கை 2020இன்படி, உலகின் மகிழ்ச்சியான நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. நார்வே

இ. பின்லாந்து ☑

ஈ. சுவிச்சர்லாந்து

❖ உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற தகுதியை பின்லாந்து நாடு மூன்றாவது முறையாக பெற்றுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. உலக மகிழ்ச்சி அறிக்கைக்கான ஆய்வாளர்கள், சுமார் 156 நாடுகளில் உள்ள மக்களிடம் தங்களளவில் மகிழ்ச்சி என்றால் என்னவென்பதுபற்றி தன்மதிப்பீடு செய்யுமாறு கோரியது. அதாவது GDP, சமூக இணக்கம், ஆதரவு, தனிமனித சுதந்திரம், ஊழலின் அளவு ஆகியவற்றை அளவு கோலாகக்கொண்டு தன்மதிப்பீடு செய்யுமாறு கோரப்பட்டது.

❖ இந்த ஆண்டுக்கான (2020) தரவரிசை, 2017–2019இல் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்தப்பட்டியலில் இந்தியா 144ஆவது இடத்தில் உள்ளது.

5.சத்யரூப் சித்தாந்தா தொடர்புடைய துறை எது?

அ. விண்வெளி ஆய்வு

ஆ. மலையேறுதல் ☑

இ. விளையாட்டு

ஈ. வணிகம்

❖ பெங்களூரைச் சார்ந்த மலையேற்ற வீரர் சத்யரூப் சித்தாந்தா, அண்மையில் ஏழு கண்டங்களில் உள்ள மிகவுயர்ந்த எரிமலைகளின் உச்சியை அடைந்த முதல் இந்தியர் என்ற பெருமைக்குரியவராக லிம்கா உலக சாதனை நூலில் இடம்பெற்றுள்ளார். கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் அவரின் பெயர் இடம்பெற்றுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் அவர் இச்சாதனையை நிகழ்த்தினார். அதற்கான ஒப்புதல் அண்மையில் அவருக்கு அளிக்கப்பட்டது.

❖ அண்டார்டிகாவின் மிகவுயர்ந்த எரிமலையான சிட்லி எரிமலையின் உச்சியை அடைந்ததன்மூலம் அவர் இந்தச் சாதனையை நிகழ்த்தினார். ஏழு கண்டத்திலும் உள்ள மிகவுயரமான மலைகளின் உச்சியை அடைந்த இளம் வயது நபர் என்ற உலக சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

6.பழங்குடியினரிடையே தொழில்முனைவை ஊக்குவிப்பதற்காக, இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பால் (TRIFED) தொடங்கப்பட்ட முன்னெடுப்பின் பெயர் என்ன?

அ. Tech for Tribals ☑

ஆ. Tribal Leader

இ. Start your business

ஈ. Tribal Entrepreneur

❖ பழங்குடியினரிடையே தொழில்முனைவை ஊக்கப்படுத்துவதற்காக இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்து, "பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

❖ குறு, சிறு மற்றும் நடுத்தர அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் இந்த முயற்சி, பிரதான் மந்திரி வன்தன் யோஜனாவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட பழங்குடி வன உற்பத்தி சேகரிப்பாளர்களுக்கு தொழில்முனைவு திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிகழ்ச்சி 30 நாட்களுக்கு நடத்தப்படும்.

7. 'RAISE 2020' என்பது எந்த நாட்டின் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாடாகும்?

அ. இஸ்ரேல்

ஆ. இத்தாலி

இ. இந்தியா ☑

ஈ. இலங்கை

❖ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது இந்தியாவில் முதல் உலகளாவிய செயற்கை நுண்ணறிவு (AI) உச்சிமாநாட்டை (RAISE–2020) நடத்தவுள்ளது. COVID–19 பாதிப்புகள் அதிகரித்துவரும் காரணத்தால் இவ்வுச்சிமாநாடு வரும் அக்.5–6ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில், ஏப்ரல் மாதத்தில் இந்த உச்சிமாநாடு நடத்த திட்டமிடப்பட்டது. இந்த உச்சிமாநாட்டில் கல்வியாளர்கள், AI துளிர் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன.

8.ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் R காந்தி மற்றும் அனந்த் நாராயண் ஆகியோர் எந்த இந்திய வங்கியின் வாரியத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்?

அ. பாரத ஸ்டேட் வங்கி

ஆ. இந்தியன் வங்கி

இ. பஞ்சாப் தேசிய வங்கி

ஈ. YES வங்கி ☑

❖ ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் R காந்தி மற்றும் முன்னாள் வங்கியாளர் அனந்த் நாராயண் ஆகியோரை YES வங்கியின் வாரியத்தின் இந்திய ரிசர்வ் வங்கி நியமித்துள்ளது. அவர்கள் அவ்வாரியத்தின் கூடுதல் இயக்குநர்களாக ஈராண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

❖ ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியில் நிதிச்சந்தைகளின் பிராந்தியத் தலைவராக அனந்த் நாராயண் பணியாற்றி வந்தார். YES வங்கியின் தலைமை நிர்வாகியாக பிரசாந்த் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

9.ஆண்டுதோறும் உலக கவிதை நாள் கொண்டாடப்படும் தேதி எது?

அ. மார்ச் 20

ஆ. மார்ச் 21 ☑

இ. மார்ச் 22

ஈ. மார்ச் 23

தமிழுக்கும் அமுதென்று பேர் — அந்தத்

தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

❖ கவிதைகளைப் படித்தல், படைத்தல், பயிற்றுவித்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு, ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 21 அன்று, உலக கவிதைகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. ஐ.நா'இன் அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான UNESCO நிறுவனத்தால், கடந்த 1999ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முப்பதாவது அமர்வின்போது அறிவிக்கப்பட்டு, உலக நாடுகள் அனைத்தாலும் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

10. ஆண்டுதோறும் பன்னாட்டு மகிழ்ச்சி நாள் கொண்டாடப்படும் தேதி எது?

அ. மார்ச் 20 ☑

ஆ. மார்ச் 21

இ. மார்ச் 22

ஈ. மார்ச் 23

மகிழ்ச்சி !

❖ மகிழ்ச்சியே மனிதனின் அடிப்படை இலட்சியம் என்ற அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் பொது அவை, கடந்த 2012 ஜூலை.12 அன்று மார்ச்.20ஆம் தேதியை பன்னாட்டு மகிழ்ச்சி நாளென அறிவித்தது. ஐ.நா அவைக்கான தீர்மானம் பூடானால் முன்னெடுக்கப்பட்டது. மொத்த நாட்டு உற்பத்தியைக் காட்டிலும் மொத்த நாட்டு மகிழ்ச்சியை அதிகரிப்பதை இலக்காக ஏற்றுக்கொண்ட நாடு பூடானாகும்.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலத்தின் மத்திய பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் கலால் துறை தலைமை ஆணையராக G V கிருஷ்ணாராவ் பொறுப்பேற்றுள்ளார்.

❖ COVID–19 (கொரோனா) பரவலைத்தடுக்கும் நோக்கில் தமிழ்நாடு முழுவதும் நாளை (24.03.2020) மாலை 6 மணி முதல் மார்ச்.31ஆம் தேதி வரை 144 தடை உத்தரவு நடைமுறைக்கு வருகிறது. மேலும் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட எல்லைகளும் மூடப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. ஏற்கனவே, மத்திய அரசால், கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய மாவட்டங்களின் எல்லைகள் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நிகழ்வுகள்

1. நடப்பாண்டு (2020) பன்னாட்டு காடுகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Forests and Biodiversity ☑

ஆ. Forests and Humans

இ. Sustainable Forests

ஈ. Forests save Us

❖ ஐ.நா அவையின் பொது அவை மார்ச்.21ஆம் தேதியை கடந்த 2012ஆம் ஆண்டில் பன்னாட்டு காடுகள் நாளென அறிவித்தது. காடுகளுக்கான ஐ.நா மன்றம் மற்றும் உணவு & வேளாண் அமைப்பு ஆகியவை காடுகள் நாள் கொண்டாட்டத்துக்கான முக்கிய அமைப்பாளர்களாக உள்ளன.

❖ அனைத்து வகையான காடுகளின் முக்கியத்துவத்தைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பன்னாட்டு காடுகள் நாள் கொண்டாடப்படுகிறது. "காடுகள் & பல்லுயிர்" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

2. COVID–19 நோய்த்தொற்றுக்கு மத்தியில், தற்காலிகமாக கை தூய்மைப்படுத்திகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு, வடிசாலைகளுக்கு (distilleries) அனுமதி வழங்கியுள்ள மாநில அரசு எது?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. மகாராஷ்டிரா

இ. பஞ்சாப் ☑

ஈ. கேரளா

❖ பஞ்சாப் மாநிலத்தில் COVID–19 நோய்த்தொற்று அதிகரித்துள்ளதை அடுத்து அம்மாநில அரசாங்கம் கை தூய்மைப்படுத்திகளை உற்பத்தி செய்து வழங்குவதற்கு வடிசாலைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் தற்காலிக அனுமதி 10 நாட்களுக்கு மட்டும் வழங்கப்படுவதாக பஞ்சாப் மாநில உணவு மற்றும் மருந்து நிர்வாக ஆணையர் அறிவித்துள்ளார். இந்த வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் கை தூய்மைப்படுத்திகள் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அரசு நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கவேண்டும்.

3. நடப்பாண்டு (2020) உலக டௌன் நோய்க்கூட்டறிகுறி நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Leaving no one behind

ஆ. We decide ☑

இ. We and You

ஈ. Together we can

❖ மனநலிவு நோய் (Down Syndrome) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐ.நா பொது அவை கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பரில், மார்ச் 21ஆம் தேதியை உலக மனநலிவு நோய் நாளென அறிவித்தது. இதையடுத்து, ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.21 அன்று இந்தக்குறைபாடு குறித்த விழிப்புணர்வு மக்களிடம் ஏற்படுத்தப்பட்டுவருகிறது. டௌன் நோய்க்கூட்டறிகுறி என்பது மனிதரில் காணப்படும் இருபத்தொராம்

குரோமோசோமில் இரண்டு இருப்பதற்குப் பதிலாக, பகுதியாகவோ, முழுமையாகவோ மேலதிகமான ஒரு குரோமோசோம் காணப்படும் நிலையாகும். "We decide" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

4.இரஷ்யாவிற்குப்பிறகு மீவுயர் அதிர்வெண் ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்திய நாடு எது?

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஆ. பிரான்ஸ்

இ. தென் கொரியா

ஈ. இஸ்ரேல்

❖ மார்ச் 20 அன்று ஒரு மீவுயர் அதிர்வெண் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்ததாக அமெரிக்கா அறிவித்தது. இது 2017ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதல் கூட்டு அமெரிக்க இராணுவம் மற்றும் கடற்படை விமானப்பரிசோதனையின் பின்தொடர்தல் பயிற்சியாகும். ஒரு மீவுயர் அதிர்வெண் ஏவுகணையால் தற்போதைய அணுவாற்றல் மிக்க எறிகணையைவிட வேகமாக பயணிக்க முடியும். குறைந்த குத்துயரத்தில் பயணிக்கும் இவை பறக்கும்போதே தனது திசையை மாற்றும் திறன்பெற்றதாகும். இவற்றைக் கண்டறிந்து தடுத்து நிறுத்துவது கடினமாகும்.

5.எல்லைப்புறச் சாலைகள் அமைப்பால் (BRO), எந்த ஆற்றின்மீது 360 அடி நீளமுள்ள தொங்கு பாலம் திறக்கப்பட்டுள்ளது?

அ. டீஸ்டா ☑

ஆ. திபாங்

இ. மனஸ்

ஈ. லோகித்

❖ எல்லைப்புறச் சாலைகள் அமைப்பானது வடக்கு சிக்கிமில் உள்ள சுங்தாங் நகரத்திற்கு அருகே டீஸ்டா ஆற்றின்மீது 360 அடி நீளமுள்ள தொங்கு பாலத்தை திறந்தது. ஸ்வஸ்திக் திட்டத்தின்கீழ் உள்ள இந்தப் பாலங்கட்டுந்திட்டம், கடந்த 2019 அக்டோபரில் தொடங்கி 2020 ஜனவரியில் நிறைவடைந்தது. இந்தப் பாலம், சிக்கிமில் சுற்றுலாவை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆயுதப்படைகளுக்கான தளவாடங்களின் இயக்கத்தையும் இது எளிதாக்குகிறது.

6.மத்திய அமைச்சரவை EMC 2.0 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டம் தொடர்புடைய துறை எது?

அ. எளிதான வணிகம்

ஆ. மின்னணு உற்பத்தி தொகுப்பு ☑



இ. மின்னுற்பத்தி

ஈ. தேர்தல் மேலாண்மை

❖ உலக தரத்திலான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கும், மாற்றியமைக்கப்பட்ட மின்னணு உற்பத்தி தொகுப்புகள் (Modified Electronics Manufacturing Clusters 2.0) திட்டத்திற்கும் நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மின்னணு உற்பத்தித் தொகுப்புகள்மூலம் பொதுவான வசதிகள் மற்றும் சௌகரியங்களை உருவாக்குவதும் இதில் அடங்கும். உத்தேசிக்கப்பட்டுள்ள EMC 2.0 திட்டத்துக்கான மொத்த மதிப்பீடு ₹3,762.25 கோடி. இதில் நிதியுதவியாக ₹3725 கோடி வழங்கப்படும்.

7.கீழ்க்கண்டவற்றுள், அண்மையில் காலமான PK பானர்ஜியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. மட்டைப்பந்து

ஆ. கால்பந்து ☑

இ. ஹாக்கி

ஈ. குத்துச்சண்டை

❖ புகழ்பெற்ற இந்திய கால்பந்து வீரரான PK பானர்ஜி, சமீபத்தில் தனது 83ஆம் வயதில் காலமானார். 1962ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய கால்பந்து அணியில் ஒருவராக அவர் இருந்தார். மூத்த கால்பந்து வீரரான இவர், தேசிய அணிக்காக மொத்தம் 84 முறை பங்கேற்று 65 சர்வதேச கோல்களை அடித்துள்ளார்.

❖ கால்பந்து விளையாட்டின் சர்வதேச நிர்வாகக் குழுவான FIFA, அவருக்கு, கடந்த 2004ஆம் ஆண்டில் 'Centennial Order of Merit'ஐ வழங்கி கௌரவித்தது.

8.நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்கள் இனி 'தூய்மைப் பணியாளர்கள்' என அழைக்கப்படுவார்கள் என அண்மையில் அறிவித்த மாநில அரசு எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. கருநாடகம்

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் 64,583 துப்புரவுப்பணியாளர்கள், இனி, 'தூய்மைப் பணியாளர்கள்' என அழைக்கப்படுவார்கள் எனத்தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி சட்டமன்றத்தில் அறிவித்தார். பொது சுகாதாரத்தை பராமரிப்பதில் அவர்கள் ஆற்றும் பணிக்கு மதிப்பளிப்பதற்காக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

❖ தூய்மைப்பணியாளர்கள் தங்குவதற்கான குடியிருப்புகள், குறிப்பிட்ட கால இடைவெளியில் உடல்நலப் பரிசோதனை, வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கான திறன்மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளை அம்மாநில அரசு ஏற்கனவே செயல்படுத்திவருகிறது.

9.ஆண்டுதோறும் உலக சிட்டுக்குருவி நாள் கொண்டாடப்படும் தேதி எது?

அ. மார்ச் 20 ☑ ஆ. மார்ச் 21

இ. மார்ச் 22 ஈ. மார்ச் 23

❖ நவீன உட்கட்டமைப்பு, நுண்ணலை கோபுரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் ஏற்படும் மாசுகள் மற்றும் குறைந்துவரும் பசுமைவெளிகள் போன்ற காரணங்களால் அருகிவரும் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையை மக்களுக்கு எடுத்துக்கூறி அதன்மூலம் அவர்களுக்கிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கடந்த 2010ஆம் ஆண்டிலிருந்து உலக சிட்டுக்குருவி நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இயற்கைப் பாதுகாப்பு ஆர்வலர் முகமது திலாவர் என்பவரால் நிறுவப்பட்ட, 'Nature Forever Society of India' என்னும் அமைப்பு, பிரான்சைச் சேர்ந்த Eco-Sys Action Foundation எனும் தொண்டு நிறுவனம் மற்றும் பல்வேறு சர்வதேச அமைப்புகளால் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

10. 2020 மே மாதம், முதன்முறையாக விண்வெளி வீரர்களை பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு அனுப்புவதற்கு முடிவுசெய்துள்ள விண்வெளி நிறுவனம் எது?

அ. NASA

ஆ. இந்திய விண்வெளி ஆய்வுமையம்

இ. SpaceX ☑

ஈ. ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்

❖ அமெரிக்காவில் தொழிலதிபர் எலன் மஸ்க் கடந்த 2002ஆம் ஆண்டு 'SpaceX' என்ற விண்வெளி ஆராய்ச்சி வணிக நிறுவனத்தை தொடங்கி அதனை நடத்திவருகிறார். இந்த நிறுவனம் முதன்முதலாக விண்வெளிக்கு, அதுவும் பூமியிலிருந்து சுமார் 250 மைல் உயரத்தில் அமைந்துள்ள பன்னாட்டு விண்வெளி ஆய்வுமையத்துக்கு வருகிற மே மாதம் வீரர்களை அனுப்பிவைக்க முடிவுசெய்துள்ளது. நாசாவைச் சார்ந்த பாப் பென்கென், டக் ஹர்லே ஆகியோரை பன்னாட்டு விண்வெளி மையத்துக்கு அனுப்பிவைக்க SpaceX நிறுவனம், 'Falcon 9' ஏவுகணையை ஏவுகிறது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப்பிரித்து, தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும் என, தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1. COVID-19'ஐத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய உயர்மட்டக்குழுவின் தலைவர் யார்?

அ. Dr V K பால் ☑

ஆ. அமிதாப் காந்த்

இ. இராஜீவ் குமார்

ஈ. ஹர்ஷ் வர்தன்

❖ COVID-19'ஐத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் இந்திய அரசு அண்மையில் மருத்துவ வல்லுநர்கள் அடங்கிய ஓர் உயர்மட்டக்குழுவை அமைத்தது. இந்தக்குழுவிற்கு இந்தியாவின் மதியுரையகமான NITI ஆயோக்கின் உறுப்பினர் Dr V K பால் தலைமைதாங்குகிறார்.

❖ தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள இந்த 21 பேர்கொண்ட உயர்மட்ட தொழில்நுட்பக்குழு, பிரபல பொதுசுகாதார நிபுணர்களைக்கொண்டுள்ளது. மத்திய சுகாதார செயலாளர் பிரீத்தி சுதன் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் ஆகியோர் இக்குழுவின் இணைத்தலைவர்களாக உள்ளனர்.

2.நடப்பாண்டில் (2020) வரும் உலக தண்ணீர் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Sustainable Water

ஆ. Water and Climate Change ☑

இ. Clean Water for All

ஈ. Water and Women

❖ உலக தண்ணீர் நாளானது கடந்த 1993ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.22 அன்று அனுசரிக்கப்படுகிறது. "நீர் மற்றும் காலநிலை மாற்றம்" என்பது நடப்பாண்டு (2020) உலக தண்ணீர் நாளுக்கான கருப்பொருளாகும்.

❖ கடந்த 1992ஆம் ஆண்டில், ஐ.நா பொது அவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இதன்மூலம் கடந்த 1993ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் மார்ச்.22 அன்று உலக தண்ணீர் நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்நாள் நன்னீரின் முக்கியத்துவத்தில் தனது கவனத்தைச் செலுத்துகிறது.

3.குரல் வாக்கெடுப்புமூலம் நிதி மசோதாவை மக்களவை நிறைவேற்றியுள்ளது. இந்திய அரசியல் அமைப்பின் எந்தப் பிரிவு, நிதி மசோதாவின் முக்கிய வகையான பண மசோதாவை வரையறுக்கிறது?

அ. பிரிவு 102

ஆ. பிரிவு 110 ☑

இ. பிரிவு 119

ஈ. பிரிவு 126

❖ மக்களவையின் நடைமுறை விதிகளின்படி, ஒரு நிதி மசோதா எனப்படுவது ஒவ்வோர் ஆண்டும் அறிமுகப்படுத்தப்படும் ஒரு மசோதாவாகும். இது, அடுத்த நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் நிதியியல் திட்டங்களைச் செயல்படுத்தும். எந்தவொரு காலத்திற்கும் துணை நிதியியல் திட்டங்களை நடைமு –றைப்படுத்தும் மசோதாவும் இதில் அடங்கும்.

❖ அண்மையில், விவாதம் ஏதும் இல்லாமல் குரல் வாக்கெடுப்புமூலம் மக்களவை நிதி மசோதாவை நிறைவேற்றியது. நிதி மசோதாவின் ஒரு முக்கிய வகை பணமசோதா என அழைக்கப்படுகிறது. இது, இந்திய அரசியலமைப்பின் 110ஆவது பிரிவினால் வரையறுக்கப்படுகிறது.

4.மார்ச்.23 அன்று வரும் தியாகிகள் நாளை, "இளையோர் அதிகாரமளிப்பு நாள் – Youth Empowerment Day" எனக் கடைப்பிடிக்கும் மாநிலம் எது?

அ. ஒடிசா

ஆ. பஞ்சாப் ☑

இ. இராஜஸ்தான்

ஈ. குஜராத்



❖ மார்ச்.23, 1931 அன்று, இளம் இந்திய விடுதலைப்போராட்ட வீரர்கள் பகத்சிங், சுக்தேவ் மற்றும் ராஜ்குரு ஆகிய மூவரும் இன்றைய பாகிஸ்தானில் உள்ள லாகூரில் தூக்கிலிடப்பட்டனர். இந்த நாள், நாடு முழுவதும், "தியாகிகள் நாள்" என அனுசரிக்கப்படுகிறது. மார்ச்.23 அன்று வரும் தியாகிகள் நாளை, பஞ்சாப் மாநில அரசு, "இளையோர் அதிகாரமளிப்பு நாள்" என நினைவுகூர்கிறது. ஜனவரி.30 அன்று வரும் மகாத்மா காந்தியின் நினைவுநாளும், இந்தியாவில், தியாகிகள் நாளென அனுசரிக்கப்படுகிறது.

5. COVID–19 SAARC அவசரகால நிதியத்துக்கு, $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை பங்களிப்புசெய்ய முடிவுசெய்துள்ள SAARC உறுப்புநாடு எது?

அ. மாலத்தீவுகள்

ஆ. பூடான்

இ. இலங்கை ☑

ஈ. ஆப்கானிஸ்தான்

❖ சமீபத்தில், பிரதமர் நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்ட, 'COVID–19 SAARC அவசரகால நிதியத்துக்கு' இலங்கை அதிபர் கோத்தபய இராஜபக்ஷ, $5 மில்லியன் அமெரிக்க டாலர்களை பங்களிப்பு செய்வதாக உறுதியளித்துள்ளார். இந்த அவசரகால நிதியம், SAARC உறுப்புநாடுகளுக்கான பாதுகாப்புக்கவசமாக இருக்கும். இது, COVID–19 தொடர்பான சிக்கல்களைக் கையாள அந்நாடுகளால் பயன்படுத்தப்படலாம்.

6.காங்கிரஸ் சமதர்மவாதி கட்சியின் நிறுவனர்களுள் ஒருவரின் பிறந்தநாள், அண்மையில், மார்ச்.23 அன்று அனுசரிக்கப்பட்டது. அவரின் பெயர் என்ன?

அ. Dr. ராம் மனோகர் லோகியா ☑

ஆ. ஜெயபிரகாஷ் நாராயண்

இ. நரேந்திர தேவ்

ஈ. மினூ மசானி

❖ Dr. ராம் மனோகர் லோகியாவின் பிறந்தநாள், சமீபத்தில், மார்ச்.23 அன்று அனுசரிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார். 23 மார்ச் 1910'இல் பிறந்த ராம் மனோகர் லோஹியா, காங்கிரஸ் சமதர்மவாதி கட்சியின் நிறுவனர்களுள் ஒருவராவார். காங்கிரஸ் சமதர்மவாதி இதழின் ஆசிரியராகவும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் வெளியுறவுத்துறை செயலராகவும் அவரிருந்தார்.

7. COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிராக வேதிகள் தெளித்து, அதன் பிராந்தியத்தை தூய்மைப்படுத்துவத –ற்காக ஆளில்லா வானூர்திகளை பயன்படுத்தியுள்ள இந்திய நகரம் எது?

அ. சென்னை

ஆ. கொச்சின்

இ. இந்தூர் ☑

ஈ. நாக்பூர்

❖ மத்திய பிரதேச மாநிலத்தின் இந்தூர் நகரம், COVID–19 நோய்த்தொற்றை ஒழிப்பதற்காக வேதிகள் தெளித்து, நகரத்தைத் தூய்மைப்படுத்துவதற்காக ஆளில்லா வானூர்திகளை பயன்படுத்தியுள்ளது. இதற்காக, இரண்டு ஆளில்லா வானூர்திகளை இந்தூர் நகராட்சி வாடகைக்கு எடுத்துள்ளது. காய்கறி சந்தைகள் மற்றும் நகரத்தின் வீதிகள்போன்ற பொது இடங்களில் வேதிப்பொருட்கள் தெளிப்பதன் மூலம் கிருமிநீக்கம் செய்யப்படுகின்றது. மக்களுக்கு தீங்குவிளைவிக்காத வகையிலான வேதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

8.நடப்பாண்டில் (2020) வரும் உலக வானிலை நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Climate and Water ☑

ஆ. The Sun, the Earth and the Weather

இ. Every Drop Counts

ஈ. Climate Change

❖ உலக வானிலை நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.23 அன்று கொண்டாடப்படுகிறது. இது, கடந்த 1950ஆம் ஆண்டில் இதேநாளில் உலக வானிலை அமைப்பால் நிறுவப்பட்ட பேரறிவிப்பை நினைவு கூர்கிறது. கடந்த 1961ஆம் ஆண்டு முதல், ஜெனீவாவை தலைமையிடமாகக்கொண்டு இயங்கும் உலக வானிலை அமைப்பால், இந்நாள், ஒரு தனித்துவமான கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. "காலநிலை மற்றும் நீர்" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

9.அண்மையில், COVID–19 தொற்றுநோய் தொடர்பான தகவல்களுக்காக, SDMC, ஒரு வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. இது எந்தக் கூட்டணியின் பேரிடர் மேலாண்மை நிறுவனமாகும்?

அ. BIMSTEC

ஆ. SAARC ☑

இ. ASEAN

ஈ. OPEC

SAARC

❖ SAARC பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள COVID–19 தொற்றுநோய் தொடர்பான தகவல்களுக்காக SAARC பேரிடர் மேலாண்மை மையம், அண்மையில் ஒரு வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. நிகழ்நேர தகவல்களுடன் SAARC உறுப்புநாடுகளில் உள்ள COVID–19 பாதிப்புகளின் எண்ணிக்கையை இந்த வலைத்தளம் காட்டுகிறது. அண்மையில், SAARC தலைவர்களிடையே நடந்த காணொலிச்சந்திப்பின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் இந்த முயற்சி முன்மொழியப்பட்டது.

10. COVID–19 அச்சம் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்கிலிருந்து விலகிய முதல் நாடு எது?

அ. இத்தாலி

ஆ. கனடா ☑

இ. ஜெர்மனி

ஈ. இந்தியா

❖ COVID–19 அச்சங்கள் தொடர்பாக டோக்கியோ ஒலிம்பிக்கிலிருந்து கனடா விலகியுள்ளது. இந்த ஆண்டு ஒலிம்பிக் நடைபெறாததால், வரும் 2021ஆம் ஆண்டு போட்டிகளுக்குத் தயாராகுமாறு ஆஸ்திரேலியா தனது விளையாட்டு வீரர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. முன்னதாக, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, முதன்முறையாக ஒலிம்பிக் போட்டிகள் ஒத்திவைக்கப்படலாம் என அறிவித்திருந்தார். இந்த ஆண்டு ஜூலை.24 முதல் தொடங்குவதாக திட்டமிடப்பட்டிருந்த ஒலிம்பிக் போட்டிகளின் அட்டவணை குறித்து பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் விரைவில் முடிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் COVID–19 பரிசோதனை மையத்தை அமைக்க மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது. ஏற்கனவே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் தலா ஒரு பரிசோதனை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் ஒன்றாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை அனைத்து மாணவர்களும் தேர்வு எழுதாமலே தேர்ச்சி செய்யப்படுவார்கள் என தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தீவிர COVID–19 (கொரொனோ) பரவலின் தொடர்ச்சியாக இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1. நடப்பாண்டில் (2020) வரும் உலக காசநோய் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ. Let's win it

ஆ. It's Time ☑

இ. Leaving no one behind

ஈ. Health Services For all



❖ காசநோய் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உலக நலவாழ்வு அமைப்பு ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.24 அன்று உலக காசநோய் நாளை அனுசரிக்கிறது. 1882ஆம் ஆண்டு இதே நாளில், மருத்துவர் இராபர்ட் கோச் காசநோயை உண்டாக்கும் பாக்டீரியத்தை கண்டறிந்ததாக அறிவித்தார். "It's Time" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். இது, நேரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக உள்ளது.

2. COVID–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு ஆபத்தான கட்டத்திலிருப்பவர்களுக்கு இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் அமைப்பட்ட தேசிய பணிக்குழு எந்த மருந்தை பரிந்துரைக்கிறது?

அ. ஹைட்ராக்ஸி–குளோரோகுயின் ☑

ஆ. குளோரோகுயின்

இ. சல்பசலாசைன்

ஈ. அசாதியோபிரினெத்தே

❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) அமைத்த COVID–19 நோய்த்தொற்றுக்கான தேசிய பணிக்குழு, COVID–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு ஆபத்தான கட்டத்தில் இருப்பவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஹைட்ராக்ஸி–குளோரோகுயின் மருந்தை பயன்படுத்த பரிந்துரைக்கிறது.

❖ COVID–19 நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் சுகாதார ஊழியர்களுக்கும் அம்மருந்தை நோய்த்தடுப்புக்காகப் பரிந்துரைக்கப்படுவதாகவும் ICMR அறிவித்துள்ளது. தேசிய பணிக் குழு பரிந்துரைத்த இந்நெறிமுறையை, அவசரகால சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்கு இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஒப்புதல் அளித்துள்ளார்.

3.ஹில்லெல் பர்ஸ்டன்பெர்க் மற்றும் கிரிகோரி மார்குலிஸ் ஆகிய இருவரும் எந்த மதிப்புமிக்க விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்?

அ. புக்கர் பரிசு

ஆ. ஏபெல் பரிசு ☑

இ. புலிட்சர் பரிசு

ஈ. கோல்டன் குளோப்

❖ கணிதத்துறையில் வழங்கப்படும் மிகவுயரிய விருதுகளுள் ஒன்றான நடப்பாண்டு (2020) மதிப்புமிக்க ஏபெல் பரிசுக்கு இஸ்ரேலைச் சார்ந்த ஹில்லெல் பர்ஸ்டன்பெர்க் மற்றும் இரஷ்ய–அமெரிக்கர் கிரிகோரி

மார்குலிஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குழு கோட்பாடு, எண் கோட்பாடு & சேர்மானவியல் ஆகியவற்றில் நிகழ்தகவு மற்றும் இயக்கவியலிலிருந்து முறைகளைப் பயன்படுத்துவதை அறிமுகம் செய்ததற்காக இவ்விரண்டு கணிதவியலாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

4. எட்டாவது இந்திய சர்வதேச திரைப்பட சுற்றுலா மாநாட்டில், IIFTC சுற்றுலா இம்பேக்ட் விருது–2020'ஐ வென்ற இந்திய திரைப்பட இயக்குநர் யார்?

அ. ஆதித்யா தார்

ஆ. சோயா அக்தர் ☑

இ. இராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ரா

ஈ. அயன் முகர்ஜி

❖ ஆசியாவின் மிகப்பெரிய திரைப்பட சுற்றுலா நிகழ்வான எட்டாவது இந்திய பன்னாட்டு திரைப்பட சுற்றுலா மாநாடு (IIFTC) சமீபத்தில் மும்பையில் நடந்தது. அப்போது, ஹிந்தித் திரைப்பட இயக்குநரான சோயா அக்தருக்கு, நடப்பாண்டுக்கான, 'IIFTC Tourism Impact' விருது வழங்கப்பட்டது. ஸ்பெயினிலும் துருக்கியிலும் படமாக்கப்பட்ட அவரது திரைப்படங்கள்மூலம், உலக சுற்றுலாவுக்கு அவராற்றிய சிறந்த பங்களிப்புக்காக அவர் இவ்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

5.சுமந்த் கத்பாலியா, அண்மையில் எந்த வங்கியின் தலைமை நிர்வாகியாக நியமிக்கப்பட்டார்?

அ. ICICI வங்கி

ஆ. HDFC வங்கி

இ. இண்டஸ்இண்ட் வங்கி ☑

ஈ. கோட்டக் மஹிந்திரா வங்கி

❖ சுமந்த் கத்பாலியாவை தலைமை நிர்வாகியாக நியமிப்பதற்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஒப்புதல் அளித்துள்ளதாக இண்டஸ்இண்ட் வங்கி அண்மையில் அறிவித்தது. சுமந்த் கத்பாலியா, தற்போது, அந்த வங்கியின் நுகர்வோர் வங்கி வணிகத்தின் தலைவராக பணியாற்றி வருகிறார். 2020 மார்ச் 24 அன்று பொறுப்பேற்ற அவர், 3 ஆண்டுகளுக்கு அப்பதவியில் இருப்பார். இவருக்கு முன்னர், ரோமேஷ் சோப்டி இண்டஸ்இண்ட் வங்கியின் தலைமை நிர்வாகியாக பணியிலிருந்தார்.

6.பொருளாதார சுதந்திரம் 2020'இன் பாரம்பரிய அறக்கட்டளை குறியீட்டில் இந்தியாவின் தரநிலை?

அ. 87

ஆ. 95

இ. 103

ஈ. 120 ☑

120

❖ அமெரிக்காவைச் சார்ந்த 'ஹெரிடேஜ் பவுண்டேஷன்' தனது பொருளாதார சுதந்திரக்குறியீட்டை கடந்த வாரம் வெளியிட்டது. இந்தக் குறியீட்டில், உலகின் மிக சுதந்திரமான மற்றும் கட்டற்ற பொருளாதாரமாக ஹாங்காங்கை விஞ்சி சிங்கப்பூர் சிறந்த நாடாக உருவெடுத்துள்ளது.

❖ இந்த அறிக்கை முதன்முதலில் வெளியிடப்பட்ட 1995ஆம் ஆண்டிலிருந்து ஹாங்காங்தான் எப்போதும் முதலிடத்தில் இருந்துவந்தது. இந்த அறிக்கையில், இந்தியா 120ஆவது இடத்தில் உள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 1.3 புள்ளிகள் அதிகம் பெற்று 2020'இல் 56.5 மதிப்பெண்களை இந்தியா எட்டியுள்ளது.

7. PEN அமெரிக்காவின் 2020 PEN / ஹெமிங்வே விருதை வென்ற இந்திய எழுத்தாளர் யார்?

அ. ருச்சிகா தோமர் ☑

ஆ. மாதுரி விஜய்

இ. அருந்ததி ராய்

ஈ. ஜும்பா லஹிரி

❖ அறிமுக புதின ஆசிரியரான ருச்சிகா தோமர், 'A Prayer for Travelers' என்ற அவரது புதினத்துக்காக நடப்பாண்டுக்கான (2020) PEN / ஹெமிங்வே விருதை வென்றவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். PEN அமெரிக்கா, கடந்த 1922ஆம் ஆண்டில் நியூயார்க் நகரத்தில் நிறுவப்பட்டது. இந்தப் பரிசை ஹெமிங்வே குடும்பம் மற்றும் எர்னஸ்ட் ஹெமிங்வே அறக்கட்டளை வழங்கி வருகிறது. $25,000 ரொக்கப்பரிசை உள்ளடக்கிய PEN / ஹெமிங்வே விருது, புதினத்தின் அடுத்தடுத்த படைப்புகளைத்தொடருவதற்கு குறிப்பிடத்தக்க நேரத்தையும் வளங்களையும் வழங்குவதற்காக நிறுவப்பட்டதாகும்.

8.இணையவழியிலும் நேரடிமுறையிலும் பயன்படுத்தக்கூடிய, 'என்காசு' என்ற முன்தொகை செலுத்திய அட்டையை (prepaid card) அறிமுகப்படுத்தியுள்ள இந்திய வங்கி எது?

அ. சிட்டி யூனியன் வங்கி

ஆ. கரூர் வைஸ்யா வங்கி ☑

இ. தமிழ்நாடு வணிக வங்கி

ஈ. தமிழ்நாடு கிராம வங்கி

❖ தமிழ்நாட்டைச்சார்ந்த கரூர் வைஸ்யா வங்கி (KVB) கரூர் மாவட்டத்தில், இணையவழியிலும் நேரடி முறையிலும் பயன்படுத்தக்கூடிய, 'என்காசு' என்ற முன்தொகை செலுத்திய அட்டையை (prepaid card) அறிமுகப்படுத்தியுள்ளது. கரூர் மாவட்டத்தில் ரொக்கப்பயன்பாட்டைக் குறைப்பதை இந்த அட்டை நோக்–கமாகக் கொண்டுள்ளது.

❖ குறைந்தபட்சம் ₹1 முதலான கொடுப்பனவுகளுக்கு அட்டைதாரர் இதனை பயன்படுத்த முடியும். இந்த அட்டையை, வங்கியின் 'டிலைட்' செயலி, UPI, NEFT (அ) வங்கியின் எந்தவொரு கிளைமூலமாகவும் மீள்நிரப்பலாம். உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் (KYC) சரிபார்ப்பிற்குப்பிறகு, வாடிக்கையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அல்லாத இருவருக்கும் இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன.

9.எந்த நகரத்தில், இந்தியாவின் முதல் COVID–19 சிறப்பு மருத்துவமையம் அமைக்கப்பட்டுள்ளது?

அ. மும்பை ☑

ஆ. புனே

இ. தேனி

ஈ. சென்னை

❖ சர் HN ரிலையன்ஸ் அறக்கட்டளை மருத்துவமனை, பிரிஹன் மும்பை மாநகராட்சியுடன் இணைந்து, COVID–19 நோய்த்தொற்று உடைய நோயாளிகளுக்காக செவன் ஹில்ஸ் மருத்துவமனையில், 100 படுக்கைகள்கொண்ட ஒரு சிறப்பு மருத்துவமையத்தை அமைத்துள்ளது. COVID–19 சிறப்பு மையம் இந்தியாவிலேயே முதன்முதலாக ரிலையன்ஸ் அறக்கட்டளையின் நிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம், காற்றுமாசைத் தடுத்து, தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் எதிர்மறை அழுத்த அறைகளை உள்ளடக்கியது என ரிலையன்ஸ் தொழிற்சாலைகள் லிட் (RIL) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

10. ₹148 கோடி மதிப்பிலான மின்சார வாகனப் பூங்கா திட்டமும், ₹500 மதிப்பிலான தரவு மைய பூங்கா திட்டமும் எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தினுடையதாகும்?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. புதுச்சேரி

ஈ. புது தில்லி

❖ தமிழ்நாட்டில் புதிய தொழில்முதலீட்டை ஈர்க்கும் வகையில், சென்னைக்கு அருகில் உள்ள SIPCOT மாநல்லூர் தொழிற்பூங்காவில், ₹148 கோடி மதிப்பில், மின்சார வாகனப்பூங்கா ஒன்றும், வணிகம் மற்றும் நிறுவனத் தகவல்களைச்சேமித்தல், மீட்டெடுத்தல் போன்ற பணிகளுக்காக சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நெமிலி, மன்னூர் கிராமங்களில் சுமார் 150 ஏக்கர் பரப்பளவில், ₹500 கோடி மதிப்பில் தரவு மைய பூங்கா ஒன்றும் உருவாக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர். எடப்பாடி க. பழனிசாமி அவர்கள் அறிவித்துள்ளார்.

❖ புத்தாக்கங்கள், அறிவுசார் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆதரித்து புதிய தொழில்களை உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு, 'புத்தாக்க நகரம்' சென்னையில் ₹350 கோடியில் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ₹877 கோடி மதிப்பில், 'திருக்கோவில்' என்ற பெயரில் தனி தொலைக்காட்சி தொடங்கப்படும் எனத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1. 'மோ ஜீவன் (என் வாழ்க்கை)' என்பது COVID–19 நோய்த்தொற்றுக்கு இடையே மாநில மக்களை வீட்டுக்குள்ளேயே இருப்பதற்கு அறிவுறுத்தும் எந்த மாநிலத்தின் முன்னெடுப்பாகும்?

அ. மேற்கு வங்கம்

ஆ. ஒடிசா ☑

இ. தெலுங்கானா

ஈ. பீகார்

❖ ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக், 'மோ ஜீவன்' என்னுமொரு திட்டத்தை தொடங்கி, COVID–19 நோய்த்தொற்றை எதிர்த்து வீட்டுக்குள்ளேயே தங்குவதற்கான உறுதிமொழியை மக்கள் எடுக்குமாறு அவர் அறிவுறுத்தினார். வீட்டுக்குள்ளேயே தங்கியிருப்பதாக உறுதிமொழிசெய்து அக்காணொளிகளை தனக்கு அனுப்புமாறு முதலமைச்சர் மக்களைக்கேட்டுக்கொண்டுள்ளார். இதனைப்பின்பற்றுவதற்கான அவர்களின் உறுதியைக்காட்ட, பொதுமக்கள் தங்கள் வீடுகளின் வாயிலில் ஓர் ஒட்டியை ஒட்டுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

2. 'மயிலாடுதுறை', எந்த இந்திய மாநிலத்தின் 38ஆவது மாவட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

❖ நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, நிர்வாக வசதிக்காக, 'மயிலாதுதுறை'யை புதிய மாவட்டமாக உருவாக்குவதாக, தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி க.பழனிசாமி அறிவித்துள்ளார். இது, தமிழ்நாட்டின் 38ஆவது மாவட்டமாக இருக்கும். நாகப்பட்டினம் மாவட்டமானது தமிழ்நாட்டின் காவிரிச் சமவெளியில் அமைந்துள்ளது. கடந்த ஆண்டு, 5 புதிய மாவட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்தது. COVID–19 (கொரோனா) நோய்த்தொற்றுக்கு மத்தியில், வாழ்வாதார இழப்பை ஈடுசெய்வதற்காக குடும்ப அட்டைதாரர்களுக்கு ₹1,000 நிதியுதவி வழங்குவதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

3.யாருடைய நினைவுநாள், 'மொத்த மனித உரிமைமீறல்கள் மற்றும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் தன்மானம் தொடர்பான உண்மைக்கான உரிமைகுறித்த பன்னாட்டு நாள்' எனக்கொண்டாடப்படுகிறது?

அ. மான்சிநொர் ஆஸ்கர் அர்னல்போ ரோமெரோ ☑

ஆ. ருட்டிலியோ கிராண்டே

இ. நெல்சன் மண்டேலா

ஈ. ஆபிரகாம் லிங்கன்

❖ "மொத்த மனித உரிமைமீறல்கள் மற்றும் அவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் தன்மானம் தொடர்பான உண்மைக்கான உரிமை குறித்த பன்னாட்டு நாள் – International Day for the Right to the Truth

Concerning Gross Human Rights Violations and for the Dignity of Victims" ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று ஐ.நா அவையால் அனுசரிக்கப்படுகிறது.

❖ 1980ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று கொலை செய்யப்பட்ட எல்சால்வடாரைச் சார்ந்த மான்சிநொர் ஆஸ்கர் அர்னுல்போ ரோமெரோவுக்கு இந்தநாள்மூலம் அஞ்சலி செலுத்தப்படுகிறது. மனித உரிமை மீறல்களை விமர்சிப்பதில் ஆஸ்கர் ரோமெரோ தீவிரமாக ஈடுபட்டிருந்தார். சமூக அநீதி மற்றும் படுகொலைகளின் நடைமுறைகளையும் அவர் கண்டித்தார். கடந்த 2018ஆம் ஆண்டில் போப் பிரான்சிஸ், அவரை, 'புனிதர்' என அறிவித்தார்.

4. COVID-19'ஐ தன்பரிசோதனை செய்ய உதவும், 'கிளாரா' என்ற செயற்கை நுண்ணறிவு (AI) திறன் படைத்த இயலியை (bot) அறிமுகம் செய்துள்ள நாடு எது?

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஆ. சீனா

இ. இரஷ்யா

ஈ. இத்தாலி

❖ US நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (CDC), COVID-19'இன் சாத்தியமான அறிகுறிகளைக் கண்டறிய மக்களுக்கு உதவுவதற்காக, 'கிளாரா' எனப்படும் ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) திறன் படைத்த ஓர் இயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. CDC அறக்கட்டளை மற்றும் மைக்ரோசாப்ட் அஸூரின் ஹெல்த்கேர் பாட் சேவையுடன் இணைந்து CDC இவ்வியலியை உருவாக்கியுள்ளது. இது, தற்போது ஐக்கிய அமெரிக்க நாடுகளில் மட்டுமே கிடைக்கிறது. இது, நோயைப்பற்றிய தகவல்களை அளிக்கிறது, செயல்பாடுகளின் போக்கை அறிவுறுத்துகிறது மற்றும் வீட்டிலேயே நோயைக் கையாள உதவுகிறது.

5.பொருளாதாரத்தை ஆதரிப்பதற்காக, மத்திய நிதியமைச்சகம் அறிவித்த அண்மைய அறிவிப்பின்படி, 2018-19ஆம் ஆண்டிற்கான வருமானவரி படிவத்தை தாக்கல்செய்வதற்கான காலக்கெடு என்ன?

அ. ஏப்ரல் 30, 2020

ஆ. மே 31, 2020

இ. ஜூன் 30, 2020 ☑

ஈ. ஆகஸ்ட் 31, 2020

❖ COVID-19 அச்சம் காரணமாக நாடு ஊரடங்கில் உள்ள இந்நிலையில், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை அறிவித்துள்ளார். அதன்படி, 2018-19ஆம் நிதியாண்-டுக்கான வருமானவரித் தாக்கல்செய்ய ஜூன் 30 வரை கால அவகாசம் நீட்டிக்கப்படுகிறது. மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி தாக்கல்செய்ய ஜூன் 30 வரை அவகாசம் அளிக்கப்படுகிறது.

❖ மேலும், வங்கி சேமிப்புக்கணக்கில் குறைந்தபட்ச இருப்பு வைக்கவேண்டும் என்பதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு பிற வங்கி ATM'களில் கட்டணமில்லாமல் பணம் எடுக்க சலுகை அளிக்கப்படுகிறது. விவாத் சே விஸ்வாஸ் திட்டமும் ஏப்.1-ஜூன்.30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

6. 2024ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நகரம் எது?

அ. பெய்ஜிங்

ஆ. பாரிஸ் ☑

இ. லண்டன்

ஈ. லாஸ் ஏஞ்சல்ஸ்

❖ பெருவில் நடந்த பன்னாட்டு ஒலிம்பிக் கமிட்டியின் அமர்வின்போது, 2024ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடாக பாரிஸ் தேர்ந்தெடுக்கப்பட்டது. அப்போது, 2028ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடாக லாஸ் ஏஞ்சல்ஸும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

❖ COVID-19 நோய்த்தொற்றுக்கு இடையே, ஜூலை 24 முதல் ஆக.9 வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்த 2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டு, 2021ஆம் ஆண்டு கோடைகாலத்திற்கு முன்பாக நடைபெறும் என பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் அறிவித்தது. இந்தத் தாமதம், 2024 போட்டிகளை பாதிக்காது எனப் பாரிஸ் ஒலிம்பிக் அமைப்பாளர்கள் அறிவித்தனர்.

7.எந்த நிறுவனத்தின் இந்தியப்பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரியாக (CEO) சமீர் அகர்வால் நியமிக்கப்பட்டுள்ளார்?

அ. அமேசான்

ஆ. வால்மார்ட் ☑

இ. ஆப்பிள்

ஈ. சாம்சங்

❖ அமெரிக்காவைச் சார்ந்த வால்மார்ட் நிறுவனத்தின் இந்தியப் பிரிவுக்கான தலைமை நிர்வாக அதிகாரியாக சமீர் அகர்வால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தற்போது தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பிலிருக்கும் கிரிஷ் ஐயரின் பதவிக்காலம் வரும் மார்ச்.31ஆம் தேதியுடன் முடியவுள்ள நிலையில் ஏப்.1 முதல் சமீர் அகர்வால இந்தியப்பிரிவுக்கான தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிரிஷ் ஐயர், அந்நிறுவனத்தின் ஆலோசகராக செயல்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ சமீர் அகர்வால், 2020 ஜனவரி மாதத்தில் துணை தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர், கடந்த 2018ஆம் ஆண்டு வால்மார்ட் நிறுவனத்தின் தலைமை திட்ட மற்றும் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து 2018 டிசம்பரில் தலைமை வணிக அதிகாரியாக பொறுப்பேற்றார்.

8. G20 அமைப்பின் தற்போதைய தலைமையாக உள்ள நாடும், G 20 தலைவர்களின் அவசாகால காணொளிவழி உச்சிமாநாட்டிற்கு தலைமைதாங்கும் நாடும் எது?

அ. ஜெர்மனி

ஆ. சவூதி அரேபியா ☑

இ. இத்தாலி

ஈ. பிரான்ஸ்

❖ G20 தலைவர்களின் அவசரகால காணொளிவழி உச்சிமாநாட்டிற்கு சவூதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல் அஜிஸ் அல் சௌத் தலைமைதாங்கவுள்ளார். தற்போது, ஜி 20 அமைப்பின் தலைவராக சவூதி அரேபியா உள்ளது. இது, தலைவர்களின் காணொளிவழி உச்சிமாநாட்டை மார்ச் 26 அன்று நடத்த அழைப்புவிடுத்தது. COVID–19 நோய்த்தொற்றால் உலகம் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையில், ஜி 20 தலைவர்கள் பங்கேற்கும் முதல் கூட்டம் இதுவாகும்.

9. MACS 4028 தொடர்புடைய பயிர் எது?

அ. நெல்

ஆ. கோதுமை ☑

இ. சோளம்

ஈ. கேழ்வரகு

❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின்கீழ் ஒரு தன்னாட்சி நிறுவனமாக விளங்கும் புனேவின் அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தைச் (ARI) சார்ந்த அறிவியலாளர்கள், 'MACS 4028' என்ற உயிரியல்படு –த்தப்பட்ட உயர்புரத கோதுமை வகையொன்றை உருவாக்கியுள்ளனர். இந்தப் பயிரின் உருவாக்கம் குறித்து இந்திய மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்க இதழில் வெளியிடப்பட்டுள்ளது. குட்டைவகை பயிரான இது, ஒரு ஹெக்டேருக்கு 19.3 குவிண்டால் வரை மகசூல்தரும் திறனை பெற்றுள்ளது. இது, சாதாரண கோதுமை வகைகளைப் போலல்லாமல், பல்வேறு தீங்குவிளைவிக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக தற்காத்துக்கொள்ளும் எனக் கூறப்படுகிறது.

10. ஓர் அண்மைய ஆய்வின்படி, இமயமலையின் பிறபகுதிகளைவிட இந்தியாவின் எந்த மாநிலத்தில் உள்ள பனிப்பாறைகள், வெகுவேகமாக உருகிவருகின்றன?

அ. உத்தரகண்ட்

ஆ. சிக்கிம் ☑

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. அஸ்ஸாம்

❖ டேராடூனில் உள்ள வாடியா இமயமலை புவியியல் ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த அறிவியலாளர்கள், அண்மையில், சிக்கிமில் உள்ள பனிப்பாறைகள் மற்ற இமயமலைப்பகுதிகளைவிட அதிக அளவில் உருகிவருவதைக் கண்டறிந்துள்ளனர். இந்த நிறுவனம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் கீழ், இமயமலையின் புவியியல் ஆய்வுக்காக இயங்கிவரும் ஒரு தன்னாட்சி ஆராய்ச்சி நிறுவனமாகும்.

❖ 'Science of the Total Environment' என்ற இதழில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வில், 1991ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை, சிக்கிம் மாநிலத்தில் உள்ள பனிப்பாறைகள் அதிகளவில் உருகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிக்கிமில், சிறிய அளவிலான பனிப்பாறைகள் மறைந்து வருவதாகவும், காலநிலை மாற்றத்தின் காரணமாக மிகப்பெரிய பனிப்பாறைகள் மெலிந்துவருவதாகவும் அதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1.அடிமை வணிகத்தால் பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் பன்னாட்டு நாள் (International Day of Remembrance of the Victims of Slavery and the Trans–Atlantic Slave Trade) அனுசரிக்கப்படும் தேதி எது?

அ. மார்ச் 23

ஆ. மார்ச் 25 ☑

இ. மார்ச் 27

ஈ. மார்ச் 29

❖ அடிமைப்படுத்ததல் மற்றும் அட்லாண்டிக் அடிமை வணிகத்தால் பாதிக்கப்பட்டோரை நினைவுகூரும் பன்னாட்டு நாளானது ஒவ்வோர் ஆண்டும் மார்ச்.25 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. கொடூரமான அடிமைமுறை காரணமாக பாதிக்கப்பட்டு அதன் காரணமாக மரணித்தவர்களுக்கு இந்த நாள் அஞ்சலி செலுத்துகிறது. இனவெறி மற்றும் பாரபட்சத்தின் ஆபத்துக்கள் குறித்த விழிப்புணர்வை இந்நாள் ஏற்படுத்துகிறது.

❖ தடுத்து வைக்கப்பட்ட, காணாமற்போன பணியாளர்களுடனான ஒருமைப்பாட்டுக்கான பன்னாட்டு நாளும் (International Day of Solidarity with Detained and Missing Staff Members) மார்ச்.25 அன்று அனுசரிக்கப்படுகிறது. பாலசுதீனிய ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகள் அவையின் நிவாரணப்பணிகள் முகாமில் பணியாற்றிய அலெக் கோலெட் என்ற முன்னாள் பத்திரிகையாளர் கடத்தப்பட்டதன் நினைவாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

2. CRISIL மதிப்பீட்டு நிறுவனத்தின் அறிவிப்பின்படி, 2020–21ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி விகிதம் என்ன?

அ. 3.5 % ☑

ஆ. 3 %

இ. 2 %

ஈ. 0.5 %

❖ அண்மையில், 2020–21ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 3.5 சதவீதமாக இருக்கும் என CRISIL மதிப்பீட்டு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 5.2 சதவீதமாக இருக்கும் என இந்நிறுவனம் முன்பு கணித்திருந்தது.

❖ இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட COVID–19 நோய்த்தொற்று மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட 21 நாள் ஊரடங்கு ஆகியவை இந்த வளர்ச்சி விகிதங்களை குறைப்பதற்கான முக்கிய காரணங்களாக உள்ளதாக இந்நிறுவனத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இந்தச் சுணக்கம், நிதி ஆண்டின் முதல் பாதியில் மிகுந்து இருக்குமென்றும் இரண்டாவது பாதியில் பொருளாதாரம் மெல்ல மீளும் எனவும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

3.இந்திய ரிசர்வ் வங்கியின் அண்மைய அறிவிப்பின்படி, தற்போதைய ரொக்க இருப்பு வீதம் என்ன?

அ. 2 %

ஆ. 3 % ☑

இ. 4 %

ஈ. 5 %

❖ COVID–19 நோய்த்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியை கையாளும் விதமாக, இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், அண்மைய நிதிக்கொள்கைக்குழு கூட்டத்திற்கு பிறகான அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். மார்ச்.31–ஏப்ரல் 3 முதல் மார்ச் 24–27 வரை, இந்திய ரிசர்வ் வங்கி, நிதிக்கொள்கைக்குழு கூட்டத்தை முன்னெடுத்தது. இதன்சமயம், ரொக்க இருப்பு வீதம் 3 சதவீதமாக குறைக்கப்பட்டது என்றும் ரெப்போ விகிதம் 4.4 சதவீதமாக குறைக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது. கடன்களுக்கான மாதத்தவணை –களை (EMI) 3 மாதங்களுக்கு நிறுத்திவைக்க வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதியளித்தது.

4.ஒரு சிறப்புத் திருத்தத்தின்மூலம், சுகாதார அமைச்சகம், ஹைட்ராக்ஸி குளோரோகுயினை, மருந்துகள் மற்றும் அழகுசாதன விதிகளின் எந்த அட்டவணையின்கீழ் வகைப்படுத்தியுள்ளது?

அ. அட்டவணை G1

ஆ. அட்டவணை H1 ☑

இ. அட்டவணை J1

ஈ. அட்டவணை K1

❖ மருந்துகள் மற்றும் அழகுசாதன விதிகளின்கீழ், அட்டவணை H1 இன்கீழ் வகைப்படுத்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் மருந்தகங்களில் விற்கப்படக்கூடாது. இந்த அட்டவணை, கடந்த 2013ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னதாக, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது (ICMR) முன்னணி மருத்துவ ஊழியர்களுக்கும், COVID–19 நோய்த்தொற்றுடைய நோயாளியுடன் தொடர்பிலிருப்பவர்களு –க்கும் இம்மருந்தை பரிந்துரைத்தது. பொதுமக்கள் இந்த மருந்தை அதிகளவில் வாங்க விரைந்தபோது, இந்த மருந்தின் பதுக்கல் மற்றும் பற்றாக்குறைபற்றிய செய்திகள் இடம்பெற்றன.

5. "Global Macro Outlook 2020–21" அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில், இந்தியாவின் வளர்ச்சியை 2.5 சதவீதமாக குறைத்துள்ள மதிப்பீட்டு நிறுவனம் எது?

அ. CRISIL

ஆ. மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை ☑

இ. S & P

ஈ. ICRA

❖ 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சியானது 2.5 சதவீதமாக குறைத்து மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவை என்னும் மதிப்பீடு நிறுவனம் அறிவித்துள்ளது.

❖ அண்மையில் மூடிஸ் வெளியிட்ட, "Global Macro Outlook 2020-21"இன்படி, இந்தியப்பிரதமர் மோடி அறிவித்த 21 நாள் ஊரடங்கு, நாட்டின் வருமானத்தில் பேரளவுக்கு இழப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக இந்நிறுவனம், இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தை 5.4 சதவீதத்தில் இருந்து 5.3 சதவீதமாக குறைத்து அறிவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

6.மத்திய அரசு அறிவித்துள்ள நிவாரண அறிவிப்பில், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு, எந்தத் திட்டத்தின் கீழ், ₹20 இலட்சம் வரையிலான பிணையற்ற கடன்கள் வழங்கப்படும்?

அ. தீனதயாள் தேசிய வாழ்வாதார திட்டம் ☑

ஆ. முத்ரா திட்டம்

இ. கிராம சுவராஜ் யோஜனா

ஈ. தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா

❖ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த 21 நாள் தேசிய ஊரடங்குக்கு இடையே, ஏழ்மை நிலையில் உள்ள மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் விதமாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இந்த நிவாரண நடவடிக்கைகளில், தீனதயாள் தேசிய வாழ்வாதார திட்டத்தின்கீழ், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ₹20 இலட்சம் வரையிலான பிணையற்ற கடன்கள் வழங்கப்படும். இந்த நடவடிக்கை, 63 இலட்சம் சுய உதவிக்குழுக்களில் உள்ள சுமார் ஏழு கோடி உறுப்பினர்களுக்கு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7. G20 அமைப்பால் நடத்தப்பட்ட முதல் காணொளிக்காட்சி உச்சிமாநாட்டில், அமைப்பின் உறுப்புநாடுகள், உலக பொருளாதாரத்திற்கு எவ்வளவு நிதியளிப்பதாக உறுதியளித்தன?

அ. $1 டிரில்லியன்

ஆ. $2 டிரில்லியன்

இ. $5 டிரில்லியன் ☑

ஈ. $10 டிரில்லியன்

❖ சவுதி அரேபியா தலைமையிலான G20 அமைப்பின் முதல் மெய்நிகர் உச்சிமாநாடு, அண்மையில், காணொளிக்காட்சி வழியாக நடைபெற்றது. இந்த மாநாட்டில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பங்கேற்றார். உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பதற்காக, $5 டிரில்லியன் அமெரிக்க டாலருக்கும் அதிகமான நிதியை வழங்குவதாக, G20 உறுப்புநாடுகளின் தலைவர்கள் அப்போது உறுதியளித்தனர். இவ்வுச்சிமாநாட்டில், பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் COVID-19 நோய்த்தொற்று ஏற்படுத்திய தாக்கத்தைக் குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் G20 நாடுகளின் தலைவர்கள் அப்போது உறுதியளித்தனர்.

8. COVID-19 நோய்த்தொற்றுக்கு இடையே, நாட்டுமக்களை வீட்டிலேயே இருக்க ஊக்குவிப்பதற்காக, 'StayHomeIndiaWithBooks' என்ற பரப்புரையைத் தொடங்கியுள்ள அமைப்பு எது?

அ. தேசிய நூல் அறக்கட்டளை ☑

ஆ. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம்

இ. தேசிய திறந்தவெளி பள்ளிக்கல்வி நிறுவனம்

ஈ. இந்திய பத்திரிக்கை அறக்கட்டளை

❖ COVID–19 நோய்த்தொற்றுக்கு இடையே நாட்டு மக்களை வீட்டிலேயே இருக்க ஊக்குவிப்பதற்காக, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் இயங்கும் தேசிய நூல் அறக்கட்டளையானது, 'Stay _Home_India_With_Books' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

❖ இந்த முயற்சியின் ஒருபகுதியாக, தேசிய நூல் அறக்கட்டளை தனது தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் வெகுவாக விற்பனையான சிறந்த நூல்களை தனது வலைத்தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ள அனுமதிக்கிறது. தேசிய நூல் அறக்கட்டளையின் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் PDF வடிவில் அதன் வலைதளத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

9. COVID–19 நோய்த்தொற்று அபாயத்தைக்கண்டறிவதற்காக, இந்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள அலைபேசி செயலியின் பெயர் என்ன?

அ. கொரோனா சுரக்ஷா

ஆ. கொரோனா கவச் ☑

இ. கொரோனா ரக்ஷா

ஈ. கொரோனா சேவக்

❖ COVID–19 நோய்த்தொற்று அபாயத்தைக்கண்டறிவதற்காக இந்திய அரசாங்கம், 'கொரோனா கவச்' எனப்படும் அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தச் செயலியை, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

❖ இச்செயலியானது, நோய்த்தொற்று அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அச்செயலியை பயன்படுத்தும் அந்தக் குறிப்பிட்ட நபர் வசிக்கின்றாரா என்பதை அவரின் இருப்பிடத்தைக்கொண்டு கண்டறிகிறது. இந்தச் செயலி, தற்போது கூகிள் பிளே ஸ்டோரில், சோதனை பதிப்பாக கிடைக்கப்பெறுகிறது.

10.மத்திய அரசின் நிவாரண அறிவிப்புக்குப்பிறகு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தில், ஒரு நபருக்கான தினசரி ஊதியம் எவ்வளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

அ. ரூ.182

ஆ. ரூ.192

இ. ரூ.202 ☑

ஈ. ரூ.242

❖ COVID–19 நோய்த்தொற்றின் காரணமாக அமலில் இருக்கும் இருபத்தொரு நாள் தேசிய ஊரடங்கில், நாட்டு மக்களுக்கு உதவுவதற்காக, மத்திய அரசு, சமீபத்தில், ₹1.7 லட்சம் கோடி மதிப்பிலான நிவாரண நிதி அறிவிப்பை வெளியிட்டது. மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்த பல்வேறு நடவடிக்கைகளுள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின்கீழ், முன்னர் ₹182 என்ற அளவில் ஒரு நாள் ஊதியம் பெற்ற ஒரு நபருக்கு, இனி, நாள் ஒன்றுக்கு ₹202 என்ற

அளவில் ஒரு நாள் ஊதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின்மூலம், 136.2 மில்லியன் குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ மக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, 3,501 நடமாடும் நியாயவிலைக்கடைகள் ₹9.66 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும் என்றும் மாநிலம் முழுவதும் கூடுதலாக 189 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் தொடங்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

நடப்பு நிகழ்வுகள்

1.நாட்டில் COVID–19 நோய்த்தொற்று பரவலை எதிர்த்துப் போராடுவதற்காக, 'ஆபரேஷன் நமஸ்தே' என்னும் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள இந்திய ஆயுதப்படை எது?

அ. இந்திய இராணுவம் ☑

ஆ. இந்தியக் கடற்படை

இ. இந்திய விமானப்படை

ஈ. இந்திய கடலோர காவல்படை

❖ இராணுவ தலைமைத்தளபதி M M நரவானேவின் அண்மைய அறிவிப்பின்படி, COVID–19 நோய்த் தொற்றுக்கு எதிரான தனது நடவடிக்கைகளை இந்திய இராணுவம், 'ஆபரேஷன் நமஸ்தே' என்ற குறியீட்டுப்பெயரில் தொடங்கியுள்ளது. இந்நடவடிக்கையின்கீழ், இந்திய இராணுவம், நாடு முழுவதும் இதுவரை எட்டுத் தனிமைப்படுத்தப்பட்ட வசதிகளை நிறுவியுள்ளது. இது, இராணுவ வீரர்களுக்கு உதவுவதற்காக படைப்பிரிவு வாரியான உதவி எண்களையும் ஏற்படுத்தியுள்ளது. இராணுவப்படை வீரர்களின் குடும்பங்களில் ஏதேனும் நோய்த்தொற்றுகள் ஏற்பட்டால், அருகிலுள்ள இராணுவ முகாமை அணுகுமாறு இராணுவ தலைமைத்தளபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

2.மத்திய சுகாதார அமைச்சகம் மற்றும் MyGov ஆகியவற்றுடன் இணைந்து, அதன் செய்தியிடல் தளத்தில் COVID–19 இயலியை (chatbot) அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ. கூகுள்

ஆ. பேஸ்புக் ☑

இ. மைக்ரோசாப்ட்

ஈ. டெலிகிராம்

❖ பேஸ்புக் சமூக வலைதளம் அண்மையில் தனது செய்திடல் தளமான பேஸ்புக் மெசஞ்சரில், COVID–19 இயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. COVID–19 (கொரோனா) நோய்த்தொற்று குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இந்தியாவின் மத்திய சுகாதார அமைச்சகம் மற்றும் MyGov ஆகியவற்றுடன் இணைந்து இவ்வியலி தொடங்கப்பட்டுள்ளது. COVID–19 வைரஸ் நோய்த்தொற்று குறித்த நம்பகமான தகவல்களை வழங்குவதோடு, அந்நோய் தொடர்பான வதந்திகள் மற்றும் போலி செய்திகளையும் இது மீளாய்வு செய்து வழங்குகிறது.

3.அண்மையில் கேரளாவில் காலமான A ராமச்சந்திரன் தொடர்புடைய தொழில் எது?

அ. அரசியல்வாதி

ஆ. அறிவியலாளர் ☑

இ. விளையாட்டு வீரர்

ஈ. இசையமைப்பாளர்

❖ மீன்வளம் மற்றும் பெருங்கடல் துறையில் புகழ்பெற்ற அறிவியலாளராக விளங்கிய Dr. A. ராமச்சந்திரன் தனது அறுபத்தியொன்றாம் வயதில் அண்மையில் கேரளாவில் காலமானார். கேரள மீன்வள மற்றும் ஆய்வுகள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் பணியாற்றிவந்தார். பல்வேறு தேசிய & பன்னாட்டு மீன்வள அமைப்புகளில் நிபுணத்துவம்மிக்க உறுப்பினராகவும் அவர் பணியாற்றியுள்ளார். நாட்டின் முதல் பன்னாட்டு நீலப்பொருளாதார கூட்டணிக்கு அவர் தலைமைதாங்கினார்.

4. COVID–19 (கொரோனா) நோய்த்தொற்றுப் பரவலை எதிர்த்துப் போராடுவதற்காக, "Team–11" என்ற பெயரில் துறைகளுக்கு இடையேயான குழுக்களை அமைத்துள்ள மாநிலம் எது?

அ. ஒடிசா

ஆ. உத்தரபிரதேசம் ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. குஜராத்

❖ உத்தரபிரதேச மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், COVID–19 நோய்த்தொற்றுப் பரவலை எதிர்த்துப் போராடுவதற்காக அதிகாரத்துவத்தினர் தலைமையிலான துறைகளுக்கு இடையேயான குழுக்களை, "Team–11" என்ற பெயரில் அமைத்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ பராமரிப்பு, அத்தியாவசிய பொருட்கள் வழங்கல் மற்றும் வேலையற்ற தொழிலாளர்களை சமாளித்தல் உள்ளிட்ட COVID–19 வைரஸ் நோய்த்தொற்றால் ஏற்பட்ட தொடர்விளைவுகள் குறித்து ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளை பரிந்துரைப்பதற்காக இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5.சமீபத்தில் காலமான பெனி பிரசாத் வர்மா, எந்த அரசியல் கட்சியின் நிறுவன உறுப்பினராக இருந்தார்?

அ. சமாஜ்வாதி கட்சி ☑



ஆ. பகுஜன் சமாஜ் கட்சி

இ. இராஷ்டிரிய ஜனதா தளம்

ஈ. இராஷ்டிரிய லோக் தளம்

❖ சமாஜ்வாதி கட்சியின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவரான பெனி பிரசாத் வர்மா (80) அண்மையில் காலமானார். 1996–1998 வரை அப்போதைய பிரதமர் H D தேவகவுடாவின் அமைச்சரவையில் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சராக அவர் பணியாற்றினார். மத்திய எஃகு அமைச்சராகவும் இருந்துள்ளார். கட்சித்தலைவர் முலாயம் சிங் யாதவுடன் அவர் நெருக்கமாக தொடர்புகொண்டிருந்தார்.

6.காமராஜர் துறைமுக நிறுவனத்தின் 66.67% பங்குகளை ₹2383 கோடிக்கு இந்திய அரசு விற்றுள்ளது. இந்தத் துறைமுகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஆந்திர பிரதேசம்

இ. கேரளா

ஈ. கர்நாடகா

❖ இந்தியாவின் பன்னிரண்டாவது மிகப்பெரிய துறைமுகமான காமராஜர் துறைமுகம், தமிழ்நாட்டில் அமைந்துள்ள சென்னை துறைமுகத்திற்கு வடக்கே, 24 கிலோமீட்டர் தொலைவில், சோழமண்டலக் கடற்கரையில் அமைந்துள்ளது. காமராஜர் துறைமுகத்தின் 66.67 சதவீத பங்குகளை சென்னை துறைமுகத்துக்கு விற்றதன்மூலம், இந்திய அரசு, ₹2,383 கோடியை திரட்டியுள்ளது. முதலீடு மற்றும் பொதுச்சொத்து மேலாண்மைத்துறையானது மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள அரசின் திரும்பப்பெற்ற முதலீடு மற்றும் பங்கு விற்பனையை நிர்வகிக்கிறது.

7.லாக்ஹீட் மார்ட்டின் மேம்பட்ட அதிவேக உயர் அதிர்வெண் (Lockheed Martin Advanced Extremely High Frequency) என்ற இராணுவ தகவல்தொடர்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?

அ. பிரான்ஸ்

ஆ. இஸ்ரேல்

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஈ. தென் கொரியா

❖ ஐக்கிய அமெரிக்க நாடுகளின் விண்வெளிப் படையானது, 'Lockheed Martin Advanced Extremely High Frequency (AEHF)' செயற்கைக்கோள் என்ற இராணுவ தகவல்தொடர்பு செயற்கைக்கோளை ஏவியது. புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரலிலிருந்து அட்லஸ் V551 ஏவுகலத்தால் இந்தச்செயற்கைக்கோள் ஏவப்பட்டது. லாக்ஹீட் மார்ட்டின் AEHF தொகுதியில் இது ஆறாவது & இறுதிச் செயற்கைக்கோளாகும். COVID-19 நோய்த்தொற்றால் அந்நாடு சந்தித்துவரும் பேரிழப்புகளுக்கு இடையே இந்த அதிபாதுகாப்பு மிக்க செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது.

8. THDC இந்தியா லிட் மற்றும் NEEPCO (வடகிழக்கு மின்னாற்றல் நிறுவனம்) ஆகியவற்றில் உள்ள பங்குகளை எந்த இந்திய பொதுத்துறை நிறுவனத்திற்கு இந்திய அரசு விற்றுள்ளது?

அ. NTPC நிறுவனம் ☑

ஆ. எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

இ. இந்திய மின்சார கட்டமைப்பு கழகம்

ஈ. பாரத மிகு மின் நிறுவனம்

❖ இந்திய அரசு, THDC இந்தியா நிறுவனத்தில் உள்ள 74.49 சதவீத பங்குகளை ₹7,500 கோடிக்கும் NEEPCO'இல் உள்ள 100% பங்குகளை ₹4000 கோடிக்கும் NTPC நிறுவனத்திற்கு முதலீடு & பொதுச் சொத்து மேலாண்மைத் துறைமூலம் விற்றுள்ளது. THDC லிட், NEEPCO & காமராஜர் துறைமுகங்களில் அதன் உத்திசார் பங்குகளின் முதலீடுகளை திரும்பப்பெறுவதன்மூலம், இந்திய அரசாங்கம், ₹13,883 கோடியை திரட்டியுள்ளது. நடப்பு நிதியாண்டில், இதுவரை, ₹48,883 கோடியை இந்திய அரசு திரட்டியுள்ளது. இது ஏற்கனவே மதிப்பீடு செய்யப்பட்ட ₹65,000 கோடியைவிட குறைவாகும்.

9.ஜப்பானிய அரசாங்க நிதி நிறுவனமான JICA, எந்தத் துறைசார்ந்த திட்டங்களுக்காக, இந்தியாவுடன் ₹15,295 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது?

அ. இரயில்வே உட்கட்டமைப்பு ☑

ஆ. ஊரக வளர்ச்சி

இ. பேரிடர் மேலாண்மை

ஈ. சாலைவழி உட்கட்டமைப்பு

❖ மூன்று பெரும் இரயில் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக, ஜப்பானிய அரசு நிதி நிறுவனமான JICA, இந்தியாவுடன் ₹15,295 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்–தங்களின்படி, வழங்கப்படவுள்ள இந்தக் கடன்தொகையில் ₹8,553 கோடி நிதி, அர்ப்பணிக்கப்பட்ட சரக்கு வழித்தடத்தின் முதற்கட்டப்பணிக்கும், மும்பை துறைமுக இணைப்புத்திட்டத்திற்கு (II) ₹4,262 கோடியும், மும்பை மெட்ரோ இரயில் வழித்தடம்–3 திட்டத்திற்கு (III) ₹2,480 கோடியும் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

10. SBI Research Ecowrap'இன் அண்மைய அறிக்கையின்படி, 2020–21ஆம் ஆண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி என்னவாக இருக்கும்?

அ. 3.6%

ஆ. 3.2%

இ. 3.0%

ஈ. 2.6% ☑

❖ SBI Research Ecowrap'இன் அண்மைய அறிக்கையானது, 2020–21ஆம் ஆண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2.6 சதவீதமாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. COVID–19 பரவலைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்ட 21 நாள் தேசிய ஊரடங்கே இந்தச் சரிவுக்கு மிகமுக்கிய காரணமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, 2019–20ஆம் ஆண்டிற்கான நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை அதன் முந்தைய மதிப்பீடான 5 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதமாக திருத்தியுள்ளது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சென்னை உயர்நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக , 'ZOOM' எனப்படும் ஆன்ட்ராய்ட் செயலியின் உதவியுடன் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் வினீத் கோத்தாரி, R சுரேஷ்குமார் ஆகியோர் வழக்குகளை விசாரித்துள்ளனர்.

❖ தமிழ்நாட்டில் ஏப்ரல்.1ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படவிருந்த, 'ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை' திட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. ஏப்.2ஆம் தேதி முதல் COVID–19 வைரஸ் நோய்த்தொற்றுக்கான நிவாரணத் தொகை வழங்கும் பணி தொடங்குவதால் அந்தத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.